**OS 4230/2020** **DATE: 07.02.2025**

**PW1- கைலாஷ்**

<u>5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது நம்பர் 66 ஜெர்மையா தெரு வேப்பேரியில் வசித்துவருகிறேன். அது என்னுடைய வாடகை வீடாகும். 2 ஆண்டுகளுக்கு முன்பு தான் அங்கு வாடகைக்கு சென்றேன். தற்போது என்னுடைய ஆதார்கார்டில் புது விலாசத்தை அப்டேட் செய்துள்ளேன். இதற்கு முன் டானா தெருவின் விலாசம் குறிப்பிட்டிருந்தேன். 2005 முதல் 4,5 விலாசம் மாறியுள்ளேன். நான் 2011ல் வழக்கு தாக்கல் செய்த போது பெருமாள் 2வது தெரு, புரசைவாக்கத்தில் குடியிருந்தேன். நான் முதலில் வியாபாரம் செய்துவந்தேன், தற்போது நான் கோல்ட் கம்பேனியில் சேல்ஸ் எக்ஸிக்யூட்டிவாக உள்ளேன். இதற்கு முன் நான் தங்கநகை தயாரிக்கும் தொழில் செய்துவந்தேன். அவ்வாறு தொழில் செய்வதற்கு லைசன்ஸ் வேண்டும் என்னிடமும் லைசன்ஸ் இருந்தது. நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் பைனான்ஸ் தொழில் எதுவும் செய்யவில்லை. நான் பைனான்ஸ் தொழில் தான் செய்து வந்தாலும் நீதிமன்றத்தில் வேணடுமென்றே வேறு தொழில் செய்துவந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை. நான் தான் அவரிடம் ஒப்பந்தம் போட்டு 5 லட்சம் கொடுத்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபோது 4/30 குட்புட் பள்ளம் தெரு ஓட்டேரி என்ற முகவரியை தான் குறிப்பிட்டுள்ளேன்.எனக்கு சரியாக என்ன விலாசம் கொடுத்தேன் என்று தற்போது ஞாபகமில்லை.இந்த வழக்கிலும் எந்த விலாசம் கொடுத்தேன் என்றும் ஞாபகமில்லை. நான் 2 வழக்கிலும் சரியான விலாசம் கொடுக்காமல் நான் இருக்கும் இடத்தை மறைத்து தவறான

விலாசத்தை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஓட்டேரியில் உள்ள விலாசமும் வாடகை விலாசம் தான். இந்த விலாசத்தில் உள்ள கைலாசம் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் அந்த கைலாசம் கிடையாது என்றால் அது தவறு. என் தந்தை பெயர் பாபுலால், இந்த வழக்கை தாக்கல் செயத கைலாசம் நான் தான் என்பதை நிரூபிக்கும் பொருட்டு என்னுடைய வழக்கறிஞர் எந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கு வேங்கடாத்திரிநாயக்கன் தெரு சொத்திற்கு தான் போட்டுள்ளேன். மொத்தவிலாசமும் எனக்கு தெரியாது. என் பெயரை பயன்படுத்தி வேறு ஒரு நபர் தான் அக்ரிமண்ட் போட்டுள்ளார் என்றாலும் அதனால் தான் எனக்கு எந்தவிவரமும் தெரியவில்லை என்றாலும் இந்த வழக்கில் சம்மந்தபட்ட நபர் நான் இல்லை என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை நடத்த அறுகதை இல்லை என்றால் சரியல்ல. நான் அக்ரிமெண்ட் போட்ட போது தாவா சொத்தில் ஜி பிளஸ் 2 கட்டிடம் இருந்தது. அந்த கட்டிடம் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் ஒப்பந்தம் போடப்பட்டதாக சொன்ன காலக்கட்டத்தில் தாவா சொத்தில் எந்தவித கட்டிடமும் இல்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வாசா 8 வரைபடத்தில் உள்ள முகவரி தாவா சொத்தின் முகவரி தான் ஆனால் அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் 2008 ல் ஒப்பந்தம் போட்டேன். தேதி மாதம் ஞாபகமில்லை. வாசா 8 ஆவணம் 22.7.2011 அன்று கட்டிட அனுமதியாகியுள்ளது ஆனால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தின் சர்வே நம்பர் மற்றும் இதர விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.2011 அனுமதிபெற்று 2012 ல் குடியேறிய நபர்கள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2008 ல் தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் தாவா தாக்கல் செய்த

நபர்கள் 2008 ல் அங்கு குடியில்லை. அவர்கள் எப்போது குடிவந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் 2011ல் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபோதே மேற்சொன்ன நபர்கள் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். அவர்களை 2011ல் நான் தாக்கல் செய்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. 2008 ல் நான் சாந்தாபாய் என்ற நபரிடம் தான் ஒப்பந்தம் போட்டேன். அவர்கள் அங்கு வழக்கை நடத்தினார். அந்த வழக்கில் அவர் பதிலுரை தாக்கல் செய்தாரா வழக்கு நடத்தினாரா என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கில் சாந்தாபாயின் விலாசனம் நம்பர் 39 வெங்கடாத்திரிநாயக்கன் தெரு, கோசப்பேட் என்று குறிப்பிட்டுள்ளேன். அந்த வழக்கில் நான் அவருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன் ஆனால் அவர் ஆஜரானாரா என்று எனக்கு தெரியாது. சாந்தாபாய் கேகே நகரில் எங்கு வசித்துவந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சாந்தாபாயின் சரியான விலாசம் குறிப்பிடாமல் அந்த வழக்கை அவர்மீது போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவருக்கு தெரியாமலயே அவர்மீது நாளிதளில் அறிவிப்பு கொடுத்து அவருக்கு எதிராக தீர்ப்பு பெற்றுள்ளேனா என்ற விவரம் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு பொய்யான ஒரு விலாசத்தை கொடுத்து ஒரு பொய்யான வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் 55 லட்சம் நான் சாந்தாபாய்க்கு கொடுக்கவேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். நான் 5 லட்சம் ஏற்கனவே சாந்தபாய்க்கு முன்பணமாக கொடுத்துள்ளேன். 50 லட்சத்தை நீதிமன்றதில் செலுத்தியுள்ளேன்.எந்த தேதியில் அந்த தொகையை செலுத்தினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நீதிமன்றத்தின் உத்தரவின் பெயரில் தான் அந்த தொகையை செலுத்தினேன். எந்த வருடம் எனக்கு சாதகமாக உத்தரவானது என்று எனக்கு ஞாபகமில்லை.

நான் தாக்கல் செய்த ஆவணத்தின் அடிப்படையில் 2011ம் ஆண்டு ஒருதலைபட்சமாக தீர்பாகியுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த உத்தரவின் எந்த தேதிக்குள் பணம் செலுத்தவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தின் மூலம் எனக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது எந்த தேதியல் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்று ஞாபகமில்லை. கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கும் படி சாந்தாபாய்க்கு நிறைவேற்று மனுவில் நான் ஒரு அறிவிப்பு கொடுத்தேன். அவர் ஆஜரானாரா என்று எனக்கு ஞாபகமில்லை.அந்த மனுவிலும் நான் சாந்தாபாயின் சரியான விலாசம் குறிப்பிடவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதன்பின் தான் நீதிமன்றத்தின் அனுமதிபெற்று நான் பணம் செலுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. காலநீட்டிப்பு மனு தாக்கல் செய்து அதில் உத்தரவு பெற்று பின்பு தான் நான் பணம் செலுத்தினேன் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே ஒப்பந்தம் மூலம் கிரையம் வாங்கும் நபராக இருந்தால் அவ்வாறு செயல்பட்டிருக்கமாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கே.எஸ். ரோகினி மீது அவர் பெயர் வில்லங்கச்சான்றிதலில் மாறியிருப்பதால் அவரை இந்த வழக்கில் தரப்பினராக போட்டேன்.ரோகினி என்பவர் மீது எந்த அடிப்படையில் பெயர் மாற்றப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் உயர்நீதிமன்றத்தில் நவம்பர் 2008ல் வழக்கு தாக்கல் செய்தபோது ரோகினி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றப்பட்ட விவரம் தெரியும் அதனால் தான் நான் சாந்தாபாய் மீது வழக்கு தாக்கல் செய்தேன். 3 முதல் 7 ம் பிரதிவாதிகள் மாறி மாறி தாவா சொத்து கைமாறியதால் அவர்களை தரப்பினர்களாக போட்டுள்ளேன். ரவிக்குமார் மற்றும் கீதாராணி பெயரில் எப்போது மாற்றப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போதே

அவர்கள் பெயருக்கு மாற்றப்பட்ட விவரம் எனக்கு தெரியும். நான் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபோது மேற்சொன்ன நபர்களை தரப்பினர்களாக சேர்க்காததால் அந்த வழக்கின் தீர்ப்பு அவர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. **26.4.2013** ல் தான் நீதிமன்றம் எனக்கு தாவா சொத்தை எழுதிக்கொடுத்தது என்று சொன்னால் தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் கிரையப்பத்திரம் பெறுவதற்கு முன்பே **5** முதல் **7** பிரதிவாதிகள் கிரையம் வாங்கி குடியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் **19.5.2010** ல் கிரையம் வாங்கி தாவா சொத்தை சொந்தமாக்கி கொண்டார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.தாவா சொத்து எனக்கு தான் சொந்தமானது என்று நான் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு முன்பே தாவா சொத்தை கிரையம் வாங்கி சுவாதீனத்தில் இருக்கும் நபர்களிடம் நான் தாவா சொத்தில் சுவாதீனம் கேட்க எனக்கு அறுகதையில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கொடுத்த சொத்தின் விவரத்தில் கண்ட விலாசத்தில் இன்றைய தேதியல் எந்தவித சொத்தும் இல்லை என்றால் சரியல்ல, தற்போது உள்ள சொத்திற்கு நான் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கு அமையப்பெற்றுள்ளது என்று நான் சரியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் **1540** சதுரஅடி என்றாலும் தாவா வெறும் **1320** சதுரஅடிக்கு மட்டுமே போட்டுள்ளேன் என்றாலும் வெறும் தரைதளம் மற்றும் முதல் தளம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதனால் தாவா சொத்திற்கும் நான் குறிப்பிட்ட சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கின்

சொத்தை கிரையம் பெற்ற நபர்கள் மீது எந்தவித உத்தரவும் பெறாததால் இந்த வழக்கு அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt. 07.02.2025 II Addl. District Judge.